# 7 செயற்கைக்கோள்களுடன் இன்று விண்ணில் பாய்கிறது பிஎஸ்எல்வி சி–56

**சென்னை, ஜூலை 29:** சிங்கப்பூருக்கு சொந்தமான 'டிஎஸ்–சார்' எனும் புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் உள்பட 7 செயற்கைக்கோள்களுடன் பிஎஸ்எல்வி சி–56 ராக்கெட் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள முதலாவது ஏவுதளத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (ஜூலை 30) காலை 6.30 மணிக்கு விண்ணில் ஏவப்படவுள்ளது.

இதன் இறுதிகட்ட பணிகளுக்கான 24 மணி நேர கவுன்ட்டவுன் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு தொடங்கியது. இந்த ஏவுதலில் முதன்மைச் செயற்கைக்கோளான டிஎஸ்–சார் செயற்கைக்கோள் 352 கிலோ எடை கொண்டது.

இதனுடன் வெலாக்ஸ்–ஏஎம் (23 கிலோ), ஆர்கேட் (24 கிலோ), ஸ்கூப் (24 கிலோ), நியூலயன் (3 கிலோ), கலாசியா (3.5கிலோ), ஆர்ப்–12 ஸ்டிரைடர் (13 கிலோ) ஆகிய 6 செயற்கைக்கோள்களும் விண்ணில் ஏவப்படுகின்றன.

# இந்தியாவில் உலகின் 75% புலிகளின் எண்ணிக்கை

சர்வதேச புலிகள் தினம் சனிக்கிழமை (ஜூலை 29) கடைப்பிடிக்கப்பட்டது.

சூழலியலில் சமநிலையைப் பாதுகாக்க உதவும் புலிகளின் எண்ணிக்கை அழிவு நிலையில் இருந்து காப்பாற்ற இந்திய அரசு 1973–ஆம் ஆண்டில் புலிகள் பாதுகாப்பு திட்டத்தை தொடங்கியது.

இந்தத் திட்டத்தின் 50 ஆண்டு பலன்களை கொண்ட விரிவான அறிக்கையை உத்தரகண்டில் உள்ள கார்பெட் புலிகள் காப்பகத்தில் மத்திய இணை அமைச்சர் அஸ்வினி குமார் சௌபே சனிக்கிழமை வெளியிட்டார். அதன் விவரம்:

இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கையைப் பாதுகாப்பதையும் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்ட இந்த லட்சியத் திட்டத்தால் கடந்த 50 ஆண்டுகளின் பலன் கிடைத்துள்ளது.

தற்போது உலகின் காட்டுப் புலிகளின் எண்ணிக்கையில் கிட்டத்தட்ட 75% இந்தியாவில் உள்ளன.

தொடக்கத்தில் 18,278 சதுர கி.மீ. பரப்பளவில் உள்ள ஒன்பது புலிகள் காப்பகங்களை உள்ளடக்கிய இந்த திட்டம், 75,796 சதுர கி.மீ. பரப்பளவில் பரவியுள்ள 53 காப்பகங்களுடன் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாக வளர்ந்துள்ளது. இது இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 2.3% உள்ளடக்கியது.

1970–களில் புலிகள் பாதுகாப்பின் முதல் கட்டம் வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தை இயற்றுவதிலும், புலிகள் மற்றும் வெப்ப மண்டலக் காடுகளுக்கான பாதுகாக்கப்பட்ட பகுதிகளை நிறுவுவதிலும் கவனம் செலுத்தியது. எனினும், 1980–களில் வேட்டையாடுதல் காரணமாக புலிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியைக் கண்டது.

**50 ஆண்டுகள் திட்டத்துக்கு கிடைத்த பலன்**

2005–ஆம் ஆண்டில் இரண்டாம் கட்ட நடவடிக்கை தொடங்கியது. நிலப்பரப்பு அளவிலான அணுகுமுறை, சமூக ஈடுபாடு மற்றும் ஆதரவு, கடுமையான சட்ட அமலாக்கத்தை செயல்படுத்துதல் மற்றும் புலிகள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அறிவியல் கண்காணிப்புக்கு நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவை புலிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உதவியது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 9–ஆம் தேதி மைசூரில் புலிகள் திட்டத்தின் 50 ஆண்டு கொண்டாட்டத்தை தொடங்கி வைத்த பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவில் குறைந்தபட்ச புலிகளின் எண்ணிக்கை 3,167 ஆக உள்ளதாக அறிவித்தார்.

இப்போது, இந்திய வனவிலங்கு நிறுவனம், கேமராவில் பதிவான மற்றும் கேமராவில் பதிவாகாத புலிகள் இருக்கும் பகுதிகளில் இருந்து மேற்கொண்ட தரவுகளின் பகுப்பாய்வில், நாட்டில் புலிகளின் எண்ணிக்கை அதிகபட்சம் 3,925 ஆகவும், சராசரி எண்ணிக்கை 3,682 ஆகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஆண்டுக்கு 6.1% என்கிற பாராட்டத்தக்க வளர்ச்சி விகிதத்தை பிரதிபலிக்கிறது.

மத்திய இந்தியா மற்றும் நேபாள எல்லையையொட்டி ஷிவாலிக் மலைத்தொடர் மற்றும் கங்கை சமவெளிகளில், குறிப்பாக மத்திய பிரதேசம், உத்தரகண்ட் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களில் புலிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது.


இருப்பினும், மேற்குத் தொடர்ச்சி மலைகள் போன்ற சில பகுதிகள் புலிகளின் எண்ணிக்கை சரிவைச் சந்தித்தன. இதனால் இலக்கு கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு முயற்சிகள் அதிக அளவில் தேவைப்பட்டன.

மிசோரம், நாகாலாந்து, ஜார்க்கண்ட், கோவா, சத்தீஸ்கர் மற்றும் அருணாசலப் பிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்களில் குறைந்த புலிகளின் எண்ணிக்கை கவலையளிக்கிறது.

கடந்த ஐந்து தசாப்தங்களாக புலிகள் பாதுகாப்பு திட்டம் மிகப்பெரிய முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஆனால் வேட்டையாடுதல் போன்ற சவால்கள் இன்னும் புலிகள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகத் தொடர்கின்றன.

புலிகளின் வாழ்விடங்கள் மற்றும் நடமாட்டத் தடங்களைப் பாதுகாப்பதற்கான தொடர்ச்சியான முயற்சிகள் மிக அவசியம் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.





# புலிகளைப் பாதுகாப்போம்



**சென்னை, ஜூலை 29:** உலகில் அருகி வரும் உயிரினமான புலிகளைப் பாதுகாப்போம் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சர்வதேச புலிகள் தினத்தையொட்டி, முதல்வர் சனிக்கிழமை ட்விட்டரில் வெளியிட்ட பதிவு:

சிறப்புமிகு உயிரினமான புலிகளின் பாதுகாப்புக்கு குரல் கொடுப்போம். அருகி வரும் உயிரினமான புலிகளைக் காப்பதற்காக தமிழக அரசின் உறுதியான முயற்சிகள் மிகச் சிறந்த முடிவுகளை அளித்துள்ளது.

2018-இல் 264-ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை, 2022-இல் 306-ஆக உயர்ந்துள்ளது.

நாம் அனைவரும் இணைந்து கானகத்தில் புலிகளின் இடத்தைப் பேணிக் காத்து, அவற்றின் அழகைப் போற்றுவோம் என்று கூறியுள்ளார் முதல்வர்.

# புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம்: கற்போர் மையங்களுக்கு விருதுகள்

**சென்னை, ஜூலை 29:** புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தும் கற்போர் மையங்களுக்கு சென்னையில் ஆக.4-ஆம் தேதி நடைபெறவுள்ள விழாவில் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

நாடு முழுவதும் கல்வி கற்காத 15 வயதுக்கு மேற்பட்டோருக்கு தன்னார்வலர்களைக் கொண்டு அடிப்படை எழுத்தறிவு பயிற்றுவிப்பதற்காக மத்திய அரசால் 'புதிய பாரத எழுத்தறிவுத் திட்டம்' கடந்த ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ் 2027-ஆம் ஆண்டுக்குள் 5 கோடி பேருக்கு கல்வி கற்பிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநரகத்தின் மூலம் இந்தத் திட்டம் கடந்த கல்வியாண்டு (2022-23) அமல்படுத்தப்பட்டது. இதன்மூலம் 5.28 லட்சம் பேருக்கு அடிப்படை எழுத்தறிவு கல்வி வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, புதிய பாரத எழுத்தறிவுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தும் கற்போர் மையங்களுக்கு விருதுகள் வழங்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை அறிவித்தது.

அதன்படி, கடந்த ஆண்டு சிறப்பாகச் செயல்பட்ட கற்போர் மையங்களின் பள்ளித் தலைமை ஆசிரியர், தன்னார்வலர், சார்ந்த மைய ஆசிரியர் பயிற்றுநர் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட உள்ளன.

இதற்காக ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தலா 3 வீதம் 38 மாவட்டங்களுக்கு 114 கற்போர் மையங்கள் அந்தந்த முதன்மைக் கல்வி அலுவலர்களின் பரிந்துரையின்படி தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த மையங்களுக்கு விருது வழங்கும் விழா மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலக வளாகத்தில் ஆகஸ்ட் 4-ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்த விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விருதுகள், சான்றிதழ்களை வழங்கவுள்ளார்.

# புதுமைப்பெண் திட்டம்: 2,11,506 மாணவிகள் பயன்

**சென்னை, ஜூலை 29:** புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் இதுவரை 2 லட்சத்து 11 ஆயிரத்து 506 மாணவிகள் பயனடைந்து வருவதாகவும், ரூ.160.97 கோடி மாணவிகளுக்கு பணப்பலனாக வழங்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் 12-ஆம் வகுப்பு முடித்த ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவிகளுக்கு பொருளாதார ரீதியாக உதவிடும் வகையிலும், இடைநிற்றல் விகிதத்தை குறைக்கும் வகையிலும் 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி - புதுமைப்பெண் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்தின் கீழ் 6 முதல் 12-ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து, மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற்படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

பாலின சமத்துவத்தை ஏற்படுத்தவும், குழந்தை திருமணத்தை தடுக்கும் நோக்கிலும் செயல்படுத்தப்படும் இந்த திட்டம் மூலம் இதுவரை 2 லட்சத்து 11 ஆயிரத்து 506 மாணவிகள் பயனடைந்து வருகின்றனர். மேலும், ரூ.160.97 கோடி பணப்பலனாக மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலக நீச்சல்: லெடக்கி புதிய சாதனை




**ஃபுகுகா, ஜூலை 29:** ஜப்பானில் நடைபெறும் உலக நீச்சல் சாம்பியன்ஷிப்பில் அமெரிக்காவின் கேட்டி லெடக்கி மகளிர் 800 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பிரிவில் தங்கப் பதக்கம் வென்று, இரு புதிய சாதனைகளை எட்டி வரலாறு படைத்தார்.

உலக சாம்பியன்ஷிப்பில் ஒரே பிரிவில் (800 மீ ஃப்ரீஸ்டைல்) 6 முறை தங்கம் வென்ற முதல் நீச்சல் போட்டியாளர் என்ற பெருமை பெற்றார். மேலும், உலக சாம்பியன்ஷிப் தனிநபர் பிரிவில் தனது 16-ஆவது தங்கப் பதக்கத்தை வென்ற அவர், சக அமெரிக்கரான மைக்கேல் பெல்ப்ஸை (15 தங்கம்) முறியடித்து, உலக சாம்பியன்ஷிப்பில் தனிநபர் பிரிவில் 16 தங்கம் வென்ற ஒரே நீச்சல் போட்டியாளர் என்ற வரலாற்றை பதிவு செய்துள்ளார்.

நடப்பு சாம்பியன்ஷிப்பில் ஏற்கெனவே 1,500 மீட்டர் ஃப்ரீஸ்டைலில் தங்கம் வென்றவருக்கு இது 2-ஆவது தங்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, 800 மீட்டர் ஃப்ரீஸ்டைல் பிரிவில் லெடக்கி 8 நிமிஷம் 8.87 விநாடிகளில் இலக்கை எட்டி முதலிடம் பிடித்தார். சீனாவின் லி பிங்ஜி 8 நிமிஷம் 13.31 விநாடிகளில் வந்து வெள்ளியும், ஆஸ்திரேலியாவின் அரியார்னே டிட்மஸ் 8 நிமிஷம் 13.59 விநாடிகளில் வந்து வெண்கலமும் பெற்றனர்.

**சாதனை:** மகளிருக்கான 200 மீட்டர் பேக்ஸ்ட்ரோக்கில் தங்கம் வென்ற ஆஸ்திரேலியாவின் கேலீ மெக்கியோன், உலக சாம்பியன்ஷிப்பின் ஒரே எடிஷனில் அனைத்து பேக்ஸ்ட்ரோக் பிரிவுகளிலும் தங்கம் வென்ற முதல் நீச்சல் போட்டியாளர் என்ற சாதனையை படைத்தார். முன்னதாக அவர், 50, 100 மீட்டர் பேக்ஸ்ட்ரோக்குகளிலும் முதலிடம் பிடித்திருந்தார்.

---

# உலக பல்கலைக்கழக விளையாட்டுகள்: இந்தியாவுக்கு 3 தங்கம், 1 வெண்கலம்

**புது தில்லி, ஜூலை 29:** சீனாவில் உலக பல்கலைக் கழக விளையாட்டுகள் சனிக்கிழமை தொடங்கிய நிலையில், முதல் நாளில் இந்தியாவுக்கு 3 தங்கம், 1 வெண்கலம் என 4 பதக்கங்கள் கிடைத்துள்ளன.



இளவேனில்



மானு பாக்கர்

துப்பாக்கி சுடுதலில், மகளிருக்கான 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவில் இளவேனில் வாலறிவன் 252.5 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றார். ஏற்கெனவே இந்தப் போட்டியின் 2019-ஆம் ஆண்டு எடிஷனில் ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் வென்றிருந்த இளவேனில், தற்போது 3 விதமான பதக்கங்களையுமே வசப்படுத்தியவரானார். மறுபுறம், 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மகளிர் தனிநபர் பிரிவில் மானு பாக்கர் 239.7 புள்ளிகளுடன் தங்கப் பதக்கத்தை தட்டிச் சென்றார்.

இப்போட்டியில் இது இவருக்கு 2-ஆவது பதக்கமாகும். முதலில், 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மகளிர் அணிகள் பிரிவில் மானு பாக்கர், அபிந்த்யா அசோக், யஷஸ்வினி சிங் ஆகியோர் கூட்டணி 1,714 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கம் வென்றது.

மகளிருக்கான ஜூடோவில் 57 கிலோ பிரிவில் யாமினி மௌரியா - மங்கோலியாவின் ஓயுன்ஜெரெலை வீழ்த்தி வெண்கலப் பதக்கம் வென்றார்.

இதனிடையே, வில்வித்தையில் காம்பவுண்ட் கலப்பு அணிகள் பிரிவில் அமன் சைனி, பிரகதி கூட்டணி இறுதிச்சுற்றுக்கு முன்னேறி இந்தியாவுக்கு மேலும் ஒரு பதக்கத்தை உறுதி செய்திருக்கிறது.